ரேஷன் எடுத்துக் கொண்டு வருகிறது. நம்முடைய தமிழ்நாடு டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் அதனுடைய ஆதரைஸ்டு கண்ட்ரோலராக நியமித்திருக்கிறார்கள். அதன்பிறகுதான் ஒரு மில்லை எற்று நடத்துகிறோம். அதற்குப் பிறகு அவர்கள் 51 சதவிகிதம் தருகிறார்கள், நாம் 49 சதவிகிதம் போடுகிறோம். நேஷனல் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் தலைவர் இந்த விவரத்தைத் தெரிந்து பேசுகிறாரா அல்லது தெரியாமல் பேசுகிறாரா என்று தெரியவில்லை, அவர்களே மத்திய சர்க்காரிடத்தில் விசாரித்து விட்டுப் பேசியிருக்கலாம். ஒரு மாநில முதலமைச்சர் சொல்கிறார்களே என்று டெல்லிக்குச் சென்று விசாரித்து விட்டுப் பேசியிருக்கலாம். ஆனால் அவர்கள் தொடர்ந்து அதே விதத்தில் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

இதில் அரசியல் நோக்கமும் இருக்கலாம், அதைப் பற்றி நாங்கள் கவலைப்படத் தயாராக இல்லை. இந்தப் பிரச்சினைப் பற்றி சம்பந்தப்பட்ட தலைவர்கள் மிகுந்த அக்கறையோடு விளக்கங்களைக் கேட்டார்கள். மத்திய அரசுக்கு நாமும் சொல்லியிருக்கிறோம். இப்போது எடுத்த முடிவுப்படி ஆறு ஆலைகளில் நான்கு ஆலைகளை நாம் எடுத்திருக்கிறோம். அதே முறையில் எடுக்க முயற்சிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நாங்களும் ஒத்துக் கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையில் போராட்டம் திரும்பப் பெறப் பட்டிருக்கிறது.

Legal-retainors for Textile Corporation

* 247 *Q.*—Thiru S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(*a*) whether Legal-retainers have been appointed for the Textile Corporation in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

Allowances to unemployed persons

* 248 *Q.*—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state whether there are proposals under the consideration of the Government to pay allowances to the unemployed persons registered with the employment Exchanges?

மாண்புமிகு திரு. செ மாதவன்: இல்லை.

Study on jurisdiction of Courts

* 249 *Q.*—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(*a*) whether the Government have constituted any Committee to study the jurisdiction of subordinate Courts in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.